1160
1160
4-28

தமிழர் மேன்மை" வரிசை நூல் க.

# தமிழ் மொழி வளர்ச்சி

ரா. வாசுதேவ சர்மா, எம். ஏ., பி. எல்.,

P31V
N28
1760B

# "தமிழ்மொழி வளர்ச்சி."

---

இது
திருசிரபுரம் தேசிய வித்யாலயத்து வடமொழிப் போதகாசிரியனும்
இயற்றமிழாசிரியனும்
'கானல்வரிப்பாட்டு', 'குறுந்தொகை', 'இறையனார் அகப்பொருள்'
'புறநானூறு' முதலிய தமிழ்ப் பெருநூல்களின்
ஆங்கில மொழிபெயர்ப்பாளனுமான

**ரா. வாசுதேவ சர்மா, எம். ஏ.; பீ. எல்.,**

ஆல் இயற்றப்பெற்றது.

ஜனானுகூல அச்சுக்கூடம்
திருசிரபுரம்.

---

1928.

விலை அணா எட்டு.

# முன்னுரை.

---

இச் சிறு கட்டுரையும், அனுபந்த வியாசங்களும், முன்னம் 1925, செப்டம்பர் முதலாகச் சிலநாள், தமிழ் நாட்டில் தமிழ்க்கலைகளைப் பரப்புதற்காகத் தீவிர பிரசாரம் செய்தல் வேண்டும் என்னும் நோக்கத்துடன் இவ் வாசிரியன் தன்னாலியன்ற ஒரு சிறு தொண்டினை மேற்கொண்டு முயன்று நின்ற காலத்தில் எழுதப்பட்டு அந்நாள் நிலவிய 'சுயராஜ்யா' 'சுதேசமித்திரன்' முதலிய பல தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்தவை. தமிழ் நாட்டிலே தமிழர் சமூகத்தை வேர்ப்புழுப் போல ஊன்றி ஒருவிதத்தும் ஏற்றமடைய வொண்ணாது நாட்டினைக் குலைத்துவரும் பல காரணங்களால் அத்தகையதொரு இயக்கம் நிலைபெறாமற் போயிற்று. என்றாலும் முன் என் மனத்துத் தோன்றி தட்டியெழுப்பித் தூண்டிய தமிழ்த்தேவி மீட்டும் அத்திருவியக்கத்தை சாதித்தல் தமிழனான என்போலியர் கடனெனத் தினமும் தூண்டி நிற்றலின் தமிழ்த்தாயின் திருவருட்டுணை நம்பி மீட்டும் அவ்வியக்கத்தைத் தோற்றுவித்தல் கருதி, தமிழ் மாணவர், அபிமானிகளிடை இப்பிரசார வேலையிலே ஒரு ஊக்கம் தோற்றுவிக்கும் கருத்தானும், அதன் நிருமாண முறை யாதெனத் திட்டமாக எடுத்து விளக்கும் ஆவசியகம் நோக்கியும் இது இன்னாள் பிரசுரிக்கப் படுகின்றது.

"தமிழர் வாழ்க்கை, தமிழர் இலக்கியம்" என்ற இவ்விரண்டினும் மேன்மையைச் சாதித்தல் கருத்துக்கொண்டு பதிக்கப்பெறும் வரிசை நூல்களுள் இது முதலாவதாகும். இச்சிறு நூலிற்குக் காட்டப்பெறும் ஆதரவு பிற நூல்களையும் பதிப்பிப்பதற்கு உபகாரப்படும். ஆதலின் தமிழன்பர் அனைவரும் இதனை அன்புடன் ஏற்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

"தமிழர் பெருமை"யைப் பலதுறையினும் விளக்குதல் கருத்துடன் தொடங்கப்பெறும் இவ்வரிசை நூல்களின் முதல்நூலினைத் தமிழ்நாட்டு எதிர்கால மேன்மையை நிருமிக்கும் வினையாளராக நிற்கும் தமிழயுவகர்களுக்கும் மாணவர்களுக்கும் சமர்ப்பிக்கிறேன்.

ஆக்கியோன்.

# தமிழ்மொழி வளர்ச்சி.

P31 J
A128

## எழுவாய்.

பொன்னும் புவியும் புதைபொருளும் யான்வேண்டேன்
துன்னுஞ் சுடர்விழியாய்த் தமிழணங்கே! நின்னடிக்கீழ்
பன்னுந் தமிழ்ப் பனுவற் பாடிடவுங் கேட்டிடவு
மின்னும் மெனவெழுஞ்சீ ரிதயமே வேண்டுவனால்!

"தமிழ் மொழி வளர்ச்சி" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதித்தருதல் வேண்டுமென இப் பத்திரிகாசிரியரின் ஆணை எனக்குக் கிடைத்தது. பன்னாளாகத் தமிழ் மொழிப் பயிர்ச்சியை வளர்க்கக் கையாடக்கூடிய முறைகள் யாவை என் பதைப்பற்றி உன்னியுன்னி யாதொரு வழியும் தெற்றென விளங் காது மனமாழ்கிக் கிடந்த எனக்கு இது இவ் விஷயத்தைப்பற்றி ஊன்றி யாலோசிக்க இடந்தருதலாயிருத்தலின் நம் நல்லாசிரியர் ஆணையை வந்தனத்துடன் ஏற்று எழுத முற்படுகின்றேன்.

## நன்னாள்

இந்நாள் தமிழ்மொழிப் பயிற்சியின் சரிதையிலே ஓர் நன்னாளாகும். தமிழ்மக்கள் சமூகத் தலைவர் முதலாகப் பள்ளியிற் பயிலும் மாணவர் ஈறாக யாவரும் தமிழ்மொழி வளர்ச்சியைக் கருதி உழைக் குமொரு சர்வ கலாசாலையை அமைத்தல் கருதி எழுதியும் பேசியும் கூட்டம் கூடியும் பிரரேபணைகள், பிரார்த்தனைகள் முதலியன புரிந் தும் தம் ஊக்கத்தைக்காட்டி முயன்று வருகின்றார்களன்றோ? தமிழ்மொழி வளர்ச்சியென்றதொரு மேடையில் இதுகாலத்தமிழர் எல்லோரும் ஒத்துழைக்க முன்வந்து கூடியுள்ளார்கள். தமிழ் மொழியை சித்திக்க முயலுபவன் ஒவ்வொருவனுக்கும் நல்வர வளிக்க தமிழ்ச் சமூகம் இன்று தயாராக இருக்கின்றது.

## தெய்வ மணம்.

தமிழ்மொழி வளர்ச்சி என்ற மகுடமிட்டதொரு கட்டுரையை எழுதப் புகுமுகத்தானே தன்னிகரில்லாத் தெய்வமணங் கமழும் நம் தாய்த் தமிழ் இப்போழ்து தன்னெழில் குறைந்து இயற்கை

வளம் மெலிந்து கீர்த்தியற்றதொரு நிலைமையில் இருக்கிறதென்பது நம்மவரிற் பெரும்பாலருக்கும் உடன்பாடாயினமை பெற்றோம். ஆனால் தமிழிலக்கிய சரிதையை நோக்குங்கால் ஆதியிலே தமிழ் மொழி அருங்கலைகள் அனைத்தும் விளக்கும் நூல்களை உடைத்தாகி மிகப் பெருமையுடன் மொழியரசி யெனப் போற்றப்பட்டு விளங்கினதாகவும் சுமார் இற்றைக்கு ஐயாயிரமாண்டுகட்கு முன்னர் ஒரு கடற்கோள் நிகழ்ந்து மக்களிற் பெரும்பான்மையோரையும் தமிழ் இலக்கிய நூற் பெருக்கையும் தமிழர் நாடுகளில் 700 (எழுநூறு) காவதம் தென்திசைக்கட் பரவியிருந்த நாற்பானைன்பது தமிழ் நாடுகளையும் தன்னகங்கொண் டழித்துவிட்டதாகவும் நாம் அறிகிறோம்.

## கையாண்ட முறை.

ஆனால் இத்தகையதொரு பெரும் விபத்து நேர்ந்த காலத்திலும் தமிழர்கள் என்ன செய்தார்கள்? மீட்டும் சங்கம் குழுமி இலக்கிய வளர்ச்சியை ஆக்கினார்களன்றோ! அவர்கள் எந்த எந்த முறைகளைக் கையாடினார்கள் என்பதைச் சிறிது கவனித்து விட்டு எனக்குத் தோன்றிய சில உபாயங்களை இங்கு விவரிப்பேன்.

எட்டுத் தொகையினுட் சிறந்த "நல்ல குறுந்தொகை" முதற் பாட்டைப் பயிலப் புகும்பொழுதே மதுரைச் சங்கத்தினர் கையாடிய சில முறைகளைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம். அம் முதற்பாட்டு இறையனாரா லாக்கப்பட்டதாகும். அதன் வரலாறு பின் வருமாறு :—

## இயலா செயலா ?

பாண்டிய மன்னன் ஒரு நாள் மாலையுலா மேற்கொண்டு தன் உய்யான வனத்திலே சென்று கொண்டிருந்தவன், எதிர்பாராததொரு திவ்விய மணம் காற்றினூடே கலந்து வீச இம்மணம் எங்கிருந்து வந்த தென்பதறியான் உயர நோக்கினவன் தன் தேவி மாடத்திலே கூந்தலை அலைத்து நின்றனளாக இம்மணம் பிறந்தது தன் தேவியின் கூந்தலின் இயன் மணமோ அல்லது அவள் கூந்தலிடைச் செருகியிருந்த மலரினாலோ என்று ஐயுற்றவன் இவ்வையந் தெளிவிப்பார்க்கு இப்பொற்கிழி பரிசு உதவுவேன் என்று ஒரு பொற்கிழியைத் தொங்கவிட்டான்.

## கடவுள் அருள்.

தருமி என்ற ஒருவன் ஆலவாய்க் கடவுள் ஆலயத்தே பரிசார கன், வறியன் தன் மிடியை யோர்ந்துநொந்து ஒரு பாசுரம் பாடிக் கொடுப்பாருளரேல் இப்பரிசு எனது ஆகும் என எண்ணமிட அருட் கடலும் அன்னவன் கலக்கம் அறிந்து இப்பாவினை அருளிப் பொறித்துத் தம் திருக்கோயிலிலே வைத்தனர். இதனைக்கொண்டு போய்த் தருமி பாண்டிய னவையிலேபாட மன்னன் தன் ஐயப்பாடு தீர்ந்து தருமியைப் பொற்கிழியைப் பெற்றுப் போம்படி உத்திர விட்டனன். ஆனால் சங்கத் தலைவனான நக்கீரனே இப்பாட்டு குற்ற முடைத்தாகலின் தருமி பரிசைப் பெறக்கூடாதெனத் தடுத்தான். தடுத்ததும், தருமி புதுவது தோன்றிய இவ்விடுக்கண் நோக்கி அலமுறலும் இறைவனார் கோபத்துடன் வந்து தன் நெற்றிக்கண் ணும் கற்றைச் சடையும் தோன்ற தம் திருக்கோலம் காட்டித் தன் பாட்டு குற்றமற்றது என வாதித்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த நம் செஞ்சொற் றமிழ்ப் புலவரோ இதற்கஞ்சுவார்? நெற்றிக்கண் ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே எனக் கூறிவிட்டனர்.

## நான்கு அம்சங்கள்

முடிவிலே, தருமி, மன்னன் உதவிய பொற்கிழியை அடைந் தானே இல்லையோ என்பதை நாம் அறியமாட்டோம். தற்சமயம் நமக்குத் தெரிந்தாகவேண்டுவதுமில்லை. ஆனால் நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியதெல்லாம் 1 மன்னனே தமிழிலக்கிய வளர்ச் சியை கவனித்தான். 2 இதற்காகக் கல்வியாளர் பலர்சேர்ந்த கூட் டம் ஒன்று உழைத்துவந்தது. 3 அடிக்கடி புலவர்களை நூல்கள் யாக்கவும் பாட்டுகள் எழுதவும் பரிசுகள் தருவதாக விளம்பரப் படுத்தி இன்ன இன்ன விஷயங்களைப்பற்றி நூல்களோ பாட்டோ தேவையென்று பிரசுரிப்பது வழக்கம். 4 பதிப்பிக்கும் ஒவ்வொரு நூலையும் பாட்டையும் மன்னன் கலைஞருடன் கூடிச் சங்கத்தி லிருந்து அன்னார் அபிப்பிராயம் முற்றிலும் அறிந்தபின்னர் குற்ற மற்றதொரு நூலுக்கே தம் பரிசை அளிப்பது வழக்கம் என்ற நான்கு அம்சங்களே ஆகும்.

## புலவர் தூய்மை.

மேலும், இப்புலவர் தயாதாக்ஷண்யம் இல்லாது குணத்தையே பாராட்டி தம் அபிப்பிராயம் உதவியது கவனிக்கத்தக்கது. இச்

சங்கத்து மற்றொரு புலவராகிய கபிலரைப்பற்றியும் பிற புலவர் தம் பெருமதிப்பை வெளியிடுங் காலத்தில்

"பொய்யா நாவிற் கபிலன்" எனவும்
"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனவும்

பாடிச் செல்கின்றனர். இவரே தம் நிர்த்தாக்ஷண்யமான சத்திய நெறியை தமது பதிற்றுப்பத்து பாட்டில், "இரக்குவாரே னெஞ்சிக்கூறேன்"......என்று பாடுதலின் இக்காலத்திய புலவரின் மனத் தூய்மை நன்கு புலனும். பின்னும் மோசியார் என்னும் ஒருபெரும் புலவரைப்பற்றிப் பாடும்பொழுது "திருந்துமொழி மோசியும்" என்று பாடுகிறார் பெருஞ்சித்திரனார்.

மேலும் இவர் இளவேனிலிலே ஆண்டுதோறும் கூட்டம் கூடித் தாம் புதுவதுநுண்ணறிவா லாராய்ந்து கண்ட சாத்திரங்களையும் தத்துவங்களையும் எடுத்துப் பிறரறியுமாறுப் பிரகடனஞ் செய்தலும் வழக்கம். இதனைக் கலித்தொகையுடையாரது

"நிலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"

என்ற வடிகளால் அறிகிறோம்.

## கவிஞர் வீறு.

அதோடும் அக்காலத்து இலக்கியத்தைச் சார்ந்த உழைப்பு மிகவும் ஊதியந் தரத்தக்கதாக இருந்தது. ஆகவின் புலவர் செருக்குடன் யாரையும் அலக்ஷியமாக நினைத்துத் தம் தூமதியால் நல்லதென நினைந்ததையே பாடிப்போயினர். தன்னில்லக் கிழத்தியை துறந்து கணிகை வயத்தனாய்த் தன்னறிவிழந்திருந்த வேள் பேகன் மனத்தைத் திருப்பியார் பெரும் புலவரேயன்றோ? (புறம் 146, 147 பாட்டுகள் பார்க்க) விறன்வேன்மன்னன் சேரன் செங்குட்டுவனைத் தருமவழி செல்லமதி கொளுத்தியதும் மாடலமறையோன்றானே? செய்யோள் அருளும் நாமகள் ஆசியும் ஒருங்குடன் படைத்த கோவூர்கிழார், கிள்ளிவளவன் நெடுங்கிள்ளி நலங்கிள்ளி முதலியோருக்கு எத்துணை நன்மதி புகட்டியுள்ளார்? சேரமான் தகடூ ரெறிந்த பெருஞ் சேர லிரும்பொறை அறியாது முரசுகட்டிலேறிக்

கண்ணயர்ந்த புலவன் மோசுகீரனைத் தன்வாளிற்றப்பாது கவரி கொண்டன்றோ வீசி நின்றான்?

"நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவா
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்து நின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசியோயே!" (புறம் 50)

## பரிசில் வகை.

மற்றும் இவர்க்கு வழங்கிய பரிசில்வகையை,

"புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
பேருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே!
கொலைவல் பாண்மகனும்மே......
ஒள்ளழற் புரந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே!" (புறம் 11)

"நின்னு நின் மலையும் பாடி வருநர்க்
கின் முகங் கரவாது வந்துநீ யளித்த
வண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே!" (புறம் 130)

"களிற்றொடு நன்கல னீயும் நாண் மகிழிருக்கை! (அகம் 76)
"அண்ணல் யானை யீயும் வண்மகிழ் வெளியன்" (அகம் 208)
"பாண ரார்ப்பப் பல்கலமுதவி" (அகம் 331)
"எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வருந்தலை போல—" (குறுந் 19)
"பைம்பொற் றாமரைப் பாணர்ச் சூட்டி
யொண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டி" (பதிற்று 48)
"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருந. 15)
"பொலந் தாமரைப் பூச் சூட்டியும்" (மதுரை 103)

என்ற பல்வேறுமேற்கோள்கள் நமக்கினிது விளக்குப. இம்மட்டோ! சேரமன்னன் தம் புலவர்க்கீந்த பரிசிற் கள்வும் உண்டோ?

## மன்னர் கோடை.

இச்சேர மன்னர் சிறப்பை எடுத்துக்கூறும் பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்தின் பதிகத்திலும் பின்வரும் குறிப்புகள் காணப்படு கின்றன :—

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனர் பாடி உம்பற்காட்டு 500 ஊர் பிரமதாயமும் 38 யாண்டுகட்கு தென்னாட்டுவருவாயிற் பாதியும் பெற்றார்.

2. களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப் பியனர் பாடி 40 லக்ஷம் பொன்னும் அவனுள்வதிற் பாகமும் கொண்டார்.

3. ஆடு கோட்பாட்டுச் சேரலாதனை காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடி 9 காப்பொன் நகைக்கும் 1 லக்ஷம் பொன் னும் அரசன் பக்கலில் வீற்றிருக்கும் உரிமையும் பெற்றார்.

4. பெருஞ்சேரலிரும் பொர்றையை அரிசில் கிழார்பாடி 9 லக்ஷம் காணமும் அரச சிம்மாசனத்தையும் பெற்றுப் பின் அரசு கட்டிலை வேந்தனிரப்பக் கொடுத்து அவனுக்கு அமைச்சராயினர்.

இதுபோல உதாரணம் எண்ணிறந்தது. மேலும், பாண்மக னும் விறலியும் புலவரும் சென்றக்கால் இவரை மனமுவந்து வர வேற்றுச் சிறப்புச் செய்யாத இல்லம் இல்லை. அரசர் அவையினும் இவர் தம் வரவை அறிவியாமற் புகும்பெருமை பெற்றிருந்தனர். “இசையேன் புக்கு” என்றார் பொருநராற்றுப் படையில் [வரி 67] வந்த புலவரை நல்வரவேற்றுப் பல்பரிசிலுதவிப் பின் “காலினே ழுடிப்பின் சென்று” (பொருந 116) வணங்கியே மன்னன் அனுப்பு வான். இது பற்றியன்றோ

“மன்னவனு நீயோ? வளநாடு முன்னதோ?
வுன்னை யறிந்தோ தமிழை யோதினேன்?
என்னை விரைந் தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ?”

என்றார் பிறரும் செருக்குடன்?

## புன்கவிஞர் செயல்.

இங்ஙனம் மன்னராலும் ஜன சமூகத்தாலும் பாராட்டிப் பரிபாலித்து வளர்க்கப்பட்ட தமிழ் சுமார் கி. பி. பத்தாவது நூற்றுண்டுவரை செழித்தோங்கிவந்தது. பின்னர் நம் தேயவளம் பிற நாட்டுப் படைஞர் ஆக்கிரமிப்பினுலும் பிற அரசியல் சமூக மாறுதல்களாலும் கெட்டு அழியவே மன்னன் முகம்பாரர்ப் புலம்போலத் தமிழ் இலக்கிய வபிருசியும் வளமும் சிறுக வாரம்பித்தன. ஆங்காங்கு ஒவ்வோரிடத்தில் தண்டனைகளாலும் அபராதங்களாலும் புன்கவிஞர் சேஷ்டைகளை மன்னரால் சிறப்பிக்கப்பெறும் ஒரு சில புலவர் அடக்கிவந்தனர். என்றுலும் இங்ஙனம் வெறும் பயத்தினுல் நாட்டப்பெறும் ஒரு இலக்கியத் திட்டம் எத்துணை நாள்தான் நிலைத்திருக்கும்? கூடிய சீக்கிரத்திலேயே தமிழ் இலக்கியத்தில் ஒருவித அராஜிகம் ஏற்பட்டது. பாடுகின்றுர் வேடிக்கையாக ஒரு புலவர்,

''குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிறக்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே!''

## துரைகள் உளரோ?

இப்புலவர் கூறும் துரைமக்கள்தான் எங்கே அதிகம் இருக்கிறுர்கள்? அப்படி யிருப்பின் படிக்காசுத் தம்பிரானும் இராமச்சந்திரக் கவிராயரும் தாம் தமிழைக் கற்றதற்குத் தம் விதியை ஏன் நோதல்வேண்டும்? வாடுகின்றுர் தம்பிரானுர்,

''அடகெடுவாய்! பலதொழிலு மிருக்கக்கல்வி
யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுள மோகனமாடக் கழைக் கூத்தாட
செப்பிடுவித்தை களாடத் தெரிந்தோமில்லை
தடமுலைவே சையராகப் பிறந்தோமில்லை

சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
மிடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
யென்ன சென்ம மெடுத்துலகி லிரக்கின்றோமே!"

மற்றும்

"கல்லாத வொருவனைநான் கற்றாயென்றேன்
காடெறியு மறவனைநான் கற்றாயென்றேன்
பொல்லாத வொருவனை நான் நல்லாயென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற்றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லையென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின்றேனே!"

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித் தான்
குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்
தான் கொடுத்துத்தா னிரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தா னுரைத்தா
னேவத்தான்? ஐயோ! எங்கும்
பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே!"

(இராமச்சந்திர கவிராயர்.)

## அதிகம் இல்லை.

இந்த இருபதாவது நூற்றாண்டிலே தமிழை ஆதரிப்பார் அதிகம் என்று சொல்ல எனக்குத் துணியவில்லை. தமிழ்க் கவித்துவமும் புலமையும் இதையொட்டி அருகித்தான் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் கீழ்மேலாகச் சுழன்றுவரும் சகடகதியைப்போல வன்றோ பாக்கியத்தசையும் மாறிமாறி வருகின்றது பரிணாமவயப்பட்டு நம் தமிழரிடையேயும் சமீபகாலத்தில் ஒரு புத்துணர்வும் தாய்மொழிப்பற்றும் ஏறபட்டு வளர்ந்துவருகிறது. தமிழ்மொழித் தொண்டு ஒவ்வொரு தமிழனுக்கும் உற்றவேலை என்று பலரும் ஓர்கின்றனர். ஆனால் அதனைச் சாதிக்கு முறைதான் யாதென்று நன்கு பலருக்கும் புலனாகவில்லை.

இது நிற்க அயல் நாடுகளிலே தத்தம் மொழிவளர்ச்சியைக் கருதி பெருமக்களும் பிரபுக்களும் புலவரும் எம் முறைகளைக் கையாடினர் என்பதைக் கவனிப்போம்.

## மேனுடுகளில்.

மேல்நாட்டவர் சரிதையிலே ஆதிசங்கம் 3-வது 'ப்டோல்மி' மன்னனல் நாட்டப்பட்டது. கி. பி. மூன்ருவது நூற்ருண்டிலே வளர்ந்தது. இதையொட்டி ஒரு பெரும் புத்தகசாலை இருந்தது. இதன் அற்புத சேகரங்கள் யாவும் துருக்கர் ஆக்கிரமித்து இவ் வூரைக் கைப்பற்றியபோது தீக்கிரையாயின.

இதற்கடுத்துப் பெருமையிற் சிறந்து வளர்ந்தது இலக்கிய வியக்கம் பெரிதும் நிகழ்த்திய ஐரோப்பியரது பொதுத்தாயகமான பிராஞ்சு நாட்டு "தூலூஸ்" நகரில் இன்றும் நிலவும் 'அகாதெமி தெழெப்ளோரோ' என்னும் 'மலர்மலிகளிக் கழகமே.' இது இன்னமும் நல்ல கவிஞருக்கு பொன்னலான அமரந்தமும் வெள்ளியாலான லில்லிமலரையும் பரிசளித்து வருகிறது.

## களியாட்டம்.

இதன்முதற் களியாட்டம் 'தூலூஸ்' நகரத்தில் கி. பி. 1384-ல் நடந்தது. அக்காலை கவியின் சிறப்பும் கண்ணியமும் நல்லறிவும் விளங்கும் கலைவல்ல மாண்புமிக்க பிரபுக்களும், தோழரும், நண்பரும் "களிக்கலைக்கா" வின் வந்து தம் பாக்களைப் பாடிக்காட்டும் படி அழைப்புக் கடிதங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. அவ்வருடம் 'விடால் தெ காஸ்டல் நதோரி' என்ற கலைஞர் யாத்த 'மரியம்மை மாண்பு' என்றதொரு காவியத்திற்கு ஒரு பொன்னலாகிய நீலப்பூ வழங்கப்பட்டதென்று நாமறிகிருேம். ஆங்கிலேயர் பிராஞ்சு தேசத்திலே போர் தொடுத்து நின்ற அந்த நூறு வருட யுத்தத்திலும் இது வலிகுன்ருது நடந்து வந்தது. கடைசியாக கி. பி. 16-ம் நூற்ருண்டில் தூலூஸ் நகர்ச் சீமாட்டியான இளெமான்ஸ் இஸாரின் பெருங்கொடையினல் இது ஒரு சாசுவத நிலையில் நிறுத்தப்பட்டது. கி. பி. 1694-ல் 14-வது லூயி என்ற அரசன் இக்கழகத்தை நிலை நாட்டி 36 அங்கத்தினருள்ளதாகச் செய்தான். இது நாம் முன் சொன்னபடி இன்றும் நடந்துவருகிறது.

## முக்கிய வேலை

பிராஞ்சியர் அகாதமி என்பது 1635 கி. பி. யில் அரசர் அனுமதியைப் பெற்றது. இதன் அங்கத்தினர் யாதாமொரு நூல் யாத்த

போது அதனை இச்சங்கத்திலே படித்துக் காட்டுவர். பிறவங்கத்தினர் அதன் குணகுணங்களைப்பற்றித் தம் அபிப்பிராயம் வெளியிடுவர். இதற்கு ஒரு தலைவரும் பொக்கிஷவதிகாரியும், பிற அங்கத்தினரும் உண்டு. தலைவராவது ''சம புலவரிடையில் முதல்வன்'' என்று இவர் விதித்திருந்தனர். இக்கழக நோக்கத்தை இதன் 17-வது விதி நன்கு விளக்கும்'' "நம்மொழிக்கு சாசுவதமான இலக்கண விதிகளை ஏற்படுத்த கவலையுடனும் சிரத்தையுடனும் உழைப்பதுவும், நம் மொழியை சுத்தமானதாகவும் சொல்வளம் நிரம்பப் பெற்றதாகவும் எல்லா விதக் கலைகளையும் சாத்திரங்களையும் விவரிக்க வல்லதாய் அதைச்செய்வதுவும் இக் கழகத்தின் முக்கிய வேலையாகும்.'' இவர்கள் இதன் மூலமாக ''சாதாரண ஜனங்கள் வழக்காலும் நியாயவாதிகளது துர்ப்பாஷையாலும் கல்வி நிரம்பாத தப்பாரிகளது தவற்றுப் பிரயோகத்தாலும் மதாசிரியர் முதலியோர் வேண்டுமென்றே புகுத்திவிட்ட ஆபாசத்தாலும் உண்டான அசுத்தங்களைக் களைவது'' கருதினர். இதன் அங்கத்தினர் நாற்பதின்மர். இவர் தம் இருபத்தாறுவது விதியினால் பிரஞ்சுமொழிக்கு ஒரு அகராதியும் இலக்கணமும் அணி யிலக்கணமும் யாப்பிலக்கணமும் எழுதுதல் மேற்கொண்டனர். இவர் பிறரால் பதிப்புறும் நூல்களையும் பரிசோதிப்பதுண்டு.

## சங்க முயற்சிகள்.

''அகாதெமி தெஸியான்ஸ்'' என்ற சாஸ்திர சங்கம் பிராஞ்சியர் அகாதமியைப்போலவே ஆரம்பிக்கப்பட்டது. 14-வது லூயி என்ற மன்னன் இச்சங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒரு உபகாரச் சம்பளம் திட்டம் செய்தான்.

ஜர்மானியாது 'அகாதமி தொ விசென்ஷாப்டன் மூ பெர்லின்' என்ற சங்கமும் இதேமாதிரி உழைப்பதுதான். இதற்கு ஒரு காரியதரிசியும், 50 அங்கத்தினரும் உண்டு. காரியதரிசிக்கு 1200 மார்க்குகளும், பிற வங்கத்தினருக்கு 600 மார்க்குகளும், வருடாந்தரச் சம்பளம்.

இடாலி தேசத்திய ''ரியால் அகாதெமியா தெல்ஸியான்ஸ்'' கி. பி. 1757ல் ஆரம்பிக்கப்பெற்று 1883-ல் அரசாங்கத்தாரனுமதியைப்பெற்றது. இது வருடாந்த அறிக்கைகளை பதிப்பித்துக்கொண்டும், சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கிக்கொண்டும் வருகிறது.

உருசியா நாட்டிலே "அகாடெமி இம்பீரியால் டெஸியான்ஸ் டெஸென் பீட்டர்ஸ்பர்க்கு இம்பெரடோர்ஸ் கேயா அகாடெமியா நோக்" என்ற சங்கம், பெரும் வழுதி பீடர் மன்னனாலே ஏற்பாடு செய்யப்பட்டு காதரின் அரசியாலே ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வரசி அச்சங்கத்திற்கு வருடந்தோறும் 4982 பவுன் வருவாய் வரக்கூடியதொரு தொகையை மூலதனமாக வழங்கினாள்.

## பெரும் புலவர் பட்டம்.

கல்வியிற்சிறந்த பதினைவர் இதன் அங்கத்தினராக நியமிக்கப் பட்டனர். இவருக்குப் பெரும்புலவர் என்ற பட்டப்பெயர் கொடுத்து, சங்கத்திலிருந்து சம்பளம் வழங்கிவந்தனர். இதன் மூல தனம் எலிசபத்தரசி நாளில் 10659 பவுன் வருவாயுள்ளதாகப் பெருகிற்று. இச் சங்கத்தின் புலவர் கிராமந்தோறும் ஆங்காங்கு நிலவரத்தை கவனித்து, அவற்றிற்கேற்றவாறு பொருளாதார முறைகளை யொட்டிச் செல்வத்தைப் பெருக்கும் முறைகளைப்பற்றிச் சிந்திக்கவும், ஜனங்களுக்கு அம்முறைகளை எடுத்துக் கூறவும் அனுப்பப்பட்டார்கள். இப்புலவருக்கு சுமார் 20 பவுன் முதல் 600 பவுன் வரை சம்பளம் விதிக்கப்பட்டிருந்தது.

இங்கிலாந்திலும் முதலாவது ஜேம்ஸ் மன்னன் இதுபோலவே ஒரு சங்கம் நியமித்துப் பார்த்தான். மதநூல்களல்லாத பிற நூல்களுக்கு அனுமதி தருவதும், ஆராய்ச்சி செய்வதும் அதன் தொழிலாக அமைத்தான். இது அதிக நாள் நிலைத்திருக்கவில்லை.

இன்னமும் இதுபோன்ற சங்கங்கள் பல்வேறு நாட்டில் கலையும் மொழியும் வளர்ப்பதற்காக ஏற்பட்டு நிலவுகின்றன. புதுபுது முறைகளைக் கையாடும் புராதனமும் பிரசித்தமுமான சில சங்கங்களைமட்டும் இங்கு கூறினேன்.

நிற்க, மேற்காட்டிய இவ்வளவு விரிவான கொள்கைகளுடன் ஷை அம்சங்களை இலக்ஷியமாகக்கொண்டு நிலவும் ஒரு சங்கமேனும் நம் நாட்டில் உண்டா? இல்லை. இத்தகையதொரு கழகம் தமிழ் நாட்டிலே அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தைப்பற்றி நான் நீண்டெடுத்தெழுத வேண்டுவதில்லை. சுமார் நாலுகோடி மக்களுக்குப் பொதுவாக விளங்கும் ஒரு மொழியிலே சீர்திருத்தப்

அபிவிர்த்திசெய்தல் ஒருவன் உழைப்பாலும் முயற்சியாலும் சித்திக்கவியலாத காரியமாம். மெய்யுழைப்பாளர் ஆயிரக்கணக்கானவர் விசுவாசத்தையும் பெற்று நிலவுவதாக உள்ளதொரு கழகமே-சங்கமே-இதை முடிக்கக்கூடும். அவ்வொரு சங்கமும் பின்வரும் முறைகளைக் கையாடுதல்வேண்டும்.

## அவசியம்.

ஆதியிலே, பிரான்சுதேசத்திலே, தற்பொழுதையதமிழகத்திற் போலவே இலக்கிய வுத்தாரண உழைப்பிற்கு ஒரு அவசியம் ஏற்பட்டது. அதன் பயனாக 'அகாதமி பிரான்சேஸ்' ஏற்பட்டது. அதைப் பற்றி விவரிக்கும்பொழுது ரெனான் எனும் பெரும் புலவர் "உலகத்திலே கழிவடையான, தாழ்ந்த, மட்டமான இலக்கியம் தோன்றாத காலமும் தேசமும் இல்லை; ஆனால் தற்போது நமக்கேற்பட்டுள்ள பெரும் விபத் தென்னவென்றால் இந்த தாழ்ந்த இலக்கியம் மேன்மேலும் பெருகி ஜனங்களுக்குள் கலந்து பொதுவாகிவிடுமென்பதே. இந்தத் தீங்கை நீக்க நமது சங்கத்தைத்தவிர வேறு எவருக்கும் தக்க சாதனங்கள் இல்லை. இதனால் நாம் நாட்டக்கருதுவது இதுவாகும். நம்மை சுற்றிலுமுள்ள யாவரும் இக்கழகத்தின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியான கௌரவம் பூண்டதொரு மேன்மையான இலக்கிய உணர்ச்சியையும் சுவையையும் நாம் உண்டாக்க வேண்டும்" என்று எழுதிப்போகிறார். அதே ஆவசியகம் தான் நம் தமிழ்நாட்டிலும் இருக்கிறது.

## மிகப் பொருத்தம்.

பின்வரும் "சென்பே" என்ற பேராசிரியர் வசனங்களும் தற்போது தமிழ் நாட்டிற்குப் பொருத்தமானவையே. "பிரான்சு நாட்டிலே குறிப்பிட்டதொரு விஷயம் நமக்கு ருசிகரமாகவும் இன்பமாகவும் தோற்றுகிறதா என்பதல்ல நாம் ஆராயவேண்டுவது. ஆனால், நாம் இங்கு சிந்திக்க வேண்டுவதெல்லாம், இப்படி இருக்கும் இன்ன பொருளை நாம் இன்பகரம் என ஏற்றல் தகுதியா, அது போற்றுவதற்குரியதா, இதன் வழி நம் மனத்தைச் சலிக்கவிடலாமா என்பதுவே" என்கிறார். அவர் பிராஞ்சியர் சங்கத்தை, "பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் பெருவாயில்" எனவும் "இலக்கிய நடையிலும் சுவையிலும் தேர்ந்த சர்வ சம்மதமான அதிகாரி" எனவும் கூறிச் செல்கின்றனர்.

## அநுபந்தம். 2.

### தமிழ்க்கலை வளர்ச்சி.

---

கீழ் மேலாகச் சுழன்று வரும் பாக்கிய சக்கரம் நம் தமிழ் நாட்டிற்குத் தற்போது உன்னத நிலையைச் சூசிப்பித்து நிற்கிறது. வடக்கினின்றும், மேற்றிசையி னின்றும், தென்னாட்டி னின்றும், நம்மைச்சூழ்ந்து நிற்கும் ஜனசமூகத்தின் ஒவ்வொரு பகுதியினின்றும் எல்லா நலனுக்கும் அடிப்படையாக உள்ள இலக்கியத்தின் மாட்டு தாகமுற்று மாண்புடை மாந்தர் புரியும் பிரயத்தின பரித்தியாகச் செயல்களின் செய்தி, தினமும் நம் செவிக்குணவாக வந்து கொண்டே இருக்கிறது. நம் நாட்டினும் தெய்வச் செல்வியான தமிழரசி தம் மக்களை ஒன்று கூடித் தனக்குக் கலைச்செல்வம் திறையளக்கும்படி விடுத்த ஆணை நம் சகோதரர் செவியிலே விழுந்திருக்கும். மொழியரசியின் கட்டளையைத் தமிழன்பர் யாவரும் தவறாது ஏற்பர் என்றே நம்புகிறேன்.

வடவேங்கடந் தென் குமரியாயிடை தமிழ்கூறு நல்லுலகம் எந்நாளும் பெருங்கல்வியின் பிறப்பிடமாகவும், பெருவீரரின் தாயகமாகவும், பண்டைய சமூகங்களுள்ளே நாகரீக நலம் மிகுதியும் படைத்ததொரு நாடாகவும் திகழ்ந்து நின்றது. கைத்தொழில், விவசாயம், வியாபாரம்முதலிய யாவற்றினுஞ்சிறந்திருந்த இத்தமிழர்தம்மன்னர் மூவருள்ளொருவன் பண்டமாற்றமாம் வியாபாரத் துறையிலே மிகுதியும் மேம்பட்டிருந்தானாக, அவன் அப்பொருள்குறிக்கும் மாற்றுதல் வல்ல "மாறன்" என்றே பெயர் படைத்தான். ஆதி சங்கரரும், இராமானுஜரும்பிறந்து புனிதமாக்கிய பொன்னாடிது. சமயகுரவராம் நாயன்மார்களும் ஆழ்வாராதியரும், தம் தீந்தொடைமிழற்றி மகிழ்வித்த திருநாடிது. புத்த பிரானின் பெருங் கருணையையும், மகாவீரனின் தூய்மையினையும் ஏற்று மிகுதியும் அறம் வளர்த்த தெய்வநாடிது. இப்பொழுது நிலவுவதாக உள்ள ஒரு சிலபண்டையநூல்களைப் பார்வையிட்டாலும், இவரிடையில் வழக்கிலே இருந்து, இவறறிந்திருந்த சாத்திரப் பெருக்கும் நூலுணர்வும் யாவரையும் பிரமிக்கச் செய்யும். இப்படிக்கிருக்க நம் தமிழன்பர் இந்நாளுறங்கி இப்

பொழுது புதுவது விழிப்புற்றுப் பண்டைத் தம்பெருமை ஓர்ந்து, தம் கலையைப் பெருக்கித் தம் அபார சக்தியைக் காட்டி, சர்வ தேச சமூகமத்தியில் தமக்குகந்ததும், தமக்குரியதும் ஆன நிலையைத் தேடிக்கொள்ள விரும்பித் தம் இலக்கிய அபிவிருத்தியைச் சாதிக்க முற்படுதல் நியாயமேயன்றோ ?

சென்ற புரட்டாசியைச் சேர, ஒரு தமிழ்ப் பிரசாராலயத்தின் தேவையைப்பற்றி நான் எழுதி, நம் நண்பர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தேன். நான் உத்தேசித்திருந்த இத் "தமிழ்க்கலை வளர்ச்சிக்கழகம்" தமிழினை வளர்ப்பதுவும் தமிழபிவிருத்திக்கு உழைப்பதும் தன் முக்கிய காரியமாகக்கொண்டு விளங்கும். இக் கழகம் இலக்கிய விவகாரத்திலே ஒரு உயர்நீதிமன்றம்போலும், இலக்கிய உழைப்பாளருக்கு உற்ற துணைவன்போலும், அமையும்; இலக்கிய மாணவர்க்கேற்ற ஆசிரியன் போலும் உற்றுழி உதவியும். உறுபொருள் கொடுக்கும் உற்ற நண்பன் போலும், போஷகன் போலும் இது இருக்கும்.

இதுவரை ஆராய்ந்தவளவிலே பின்வரும் காரியங்களை சித்திக்க இக்கழகம் நாடும்.

1. தமிழ் நாட்டிலும், தமிழர் குடியேற்ற நாட்டிலுமுள்ள இலக்கியச் சங்கங்கள் யாவற்றையும் உறவு கூட்டி இக்கழகத்தோடு உதவிச்சங்கமாகவும், சகோதர சங்கமாகவும் இணைப்பித்தல். இதனால் இரு சங்கங்களுக்கும் பரஸ்பர அனுகூலங்கள் பல ஏற்படும்

2. தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகள் யாவற்றின் உதவியையும் நாடி அவற்றிற்கு இலக்கிய சம்பந்தமாக நாம் செய்யக்கூடிய உதவிகளைச் செய்தல்.

3. தமிழிலக்கிய உழைப்பிலே ஆசிரியராகவோ, பதிப்பாசிரியராகவோ உபபத்திராதிபராகவோ, பிரசுரகர்த்தராகவோ அல்லது பத்திரிகாசிரியராகவோ, ஈடுபட்டு நிற்கும் தமிழ்ப் புலமையாளர் யாவரையும் தன் அங்கத்தினராகவும், உத்தியோகஸ்தராகவும் அமைத்துக்கொண்டு, அவர்களுக்குள் உறவு கூட்டுதல். பிற சௌகரியங்களை அவர்களுக்குச் சாதித்தல்.

4. சர்வகலாசாலையாருடனும், அரசாங்கத்தாருடனும், தமிழ்க் கலை வளர்ச்சிக்காகவும், தமிழ்க்கல்வி விஷயமாகவும், கலந்துழைத்தும், அபிப்பிராய முதவியும் பிறவாற்றானும் தமிழ்ப் பயிற்சியை உயர்த்துதல்.

5. தமிழர், தமிழிலக்கியம், தேச சரிதை, தத்துவம் முதலியவற்றைக் கூறும் புத்தகங்கள் நிரம்பியதொரு வாசகசாலையை அமைத்தல்.

6. காலந்தோறும் கூட்டங்கள் கூட்டி அவ்வப்பொழுது ஏற்பட்டுள்ள இலக்கிய வளர்ச்சியைப் பரிசீலித்தல்.

7. தமிழ் நூல்களைத் தாமே பதிப்பித்தல். தக்க ஆசிரியர்களைக் கொண்டு நூல்கள் பார்வையிடல்.

8. பரிசுகளும், பரீக்ஷைகளும், நன்மதிப்பும், யோக்கியதா பத்திரமும் வழங்கித் தமிழின்பால் அன்பும், பெருமையும், புலமையும் தோற்றுவித்தல். இவைகள்யாவும் செம்மையாக நிறைவேற,

9. ஒரு அச்சியந்திர சாலையை கழகத்தின் சார்பாக அமைப்பதும்,

10. புத்தக விற்பனைசாலை ஒன்றை நடத்துவதும் இதன் பாற்படும். நாளடைவில்,

11. இதன் ஆதாரவில் பெரும்புலவர் பலர் கொண்டதொரு கல்வியூறியை அமைக்கவும் கூடும்.

12. பிரசார வேலைக்காகத் தமிழ் இலக்கியத்தைப்பற்றி கிராமங்கள் தோறும் சென்று பிரசங்கம் புரிந்து ஜனங்களுக்குள் இலக்கிய உணர்ச்சியைப் பெருக்க புலவரை ஏற்பாடு செய்யவும் இயலும்.

13. இதன் சார்பாக ஆராய்ச்சியையும் இலக்கிய விமரிசனத்தையும் (விமரிசனம்பரிசீலனம்நூல் நயன் தெரிதல்) முக்கியமாகக் கொண்டதொரு இலக்கியப் பத்திரிகையை நடத்தவும் முற்படும்.

இவ்வளவு விஸ்தாரமான நோக்கங்களைச் சாதித்தல் மேற்கொண்டதொரு கழகம், மிகுந்ததொரு நிதியம் மூலதனமாகச் சேக

ரஞ்செய்து கொண்ட பின்னரேதான் தன் வேலையை ஆரம்பிக்கக் கூடும் என்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை. தமிழராயினோர் நாலு கோடி மக்களுக்கும் பொதுவானதொரு மொழியிலே சீர்திருத்தம் அபிவிருத்தி முதலியனசெய்வது ஒருவன்முயற்சியாலும் உழைப்பாலும் சித்திக்கக் கூடியதொரு காரியமில்லை. மெய்யன்பர் உழைப்பாளர் ஆயிரக்கணக்கானவர் விசுவாசத்தையும் ஆசியையும் உதவியையும் பெற்று நிலவுவதாக உள்ளதொரு கழகமே இதனைமுடித்தல் இயலும். ஆகவே, தமிழ்நாட்டு மாட்சிமை பொருந்திய மகாராஜாக்களையும், மன்னரையும், ஜமீன்தாரர்களையும், மிட்டாதாரர்களையும் கொடைவள்ளல்களையும் பெரும் புலவர்களையும் ஆசிரியர்களையும், பிரசுரசாலையதிபர்களையும், புத்தகசாலையதிபர்களையும், தேசாபிமானிகளையும், உத்தியோகஸ்தர்களையும், மாணவர்களையும், பிரபுக்களையும், சாதாரண ஜனங்களையும், யாவரையும் தம்மாலியன்ற உதவியைஆசீர்வாத மொழியாலும், அபிப்பிராய சகாயத்தாலும், பொருளுதவியாலும், வாக்குத்தானத்தாலும் நன்கொடையாலும் செய்யும்படிப் பிரார்த்திக்கிறேன்.

சிற்சில கணக்குகளிலிருந்து நான் மேலே விவரித்துள்ளவேலை பூராவும் தொடங்குவதற்கு சுமார் ரூபாய் 30,000 (முப்பதினாயிரம்) வரை தேவையாயிருக்குமென்று தோன்றுகிறது. தமிழரிடை இத்தகையதொருகழகம் சாசுவதமாக நின்றுநிலவித் தொண்டுபுரிதற்கு மேற்கூறிய தொகை வேண்டுவதேயாகும். அதன் பெரும்பகுதி கிடைப்பினும் வேலையை ஆரம்பித்து விடலாம். ஆனால் மேற்கூறிய தொகை சேரும்வரை வசூல் வேலையையும் கூடச் செய்தேவருவது அவசியமாகும்.

ஆகவே இத்தகைய தொரு கழகத்தின் ஆரம்ப நிதிக்காகத் தங்கள் (பொது ஜனங்கள்) ஆசியையும், அபிப்பிராயத்தையும், இயன்ற பொருளுதவியையும் புரிந்து இவ்வேலையை நிறைவேற்றி வைக்கும்படிக்கும், யாவரும் இக் கழகத்திலே அங்கத்தினராகத் தம் பெயரைப் பதிவு செய்து கொள்ளும்படிக்கும், மீண்டும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## அனுபந்தம் 3.

## தமிழ்க் காவியச் சுவையமுதம்

## இனிமையும் அழகும்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

பாரதியார் இவ்வடிகளைப் பாடின போது என்ன கருத்துடன் பாடினரோ நான் அறியமாட்டேன். கைலாசவாசி எம் கவியரசு தமிழ் மாட்டு அளவில் பக்தியும் பிரேமையும் பூண்டிருந்தார் என்ற தொரு அனுமானம் மட்டுமே யன்றி, மற்றும் நம் தமிழ்மொழி இன்னிசைக்கு மிகவும் எடுத்தது என்பதும், இசையொடுதொடுத்த பாட்டுகள் கொண்டுயாக்கப்பெறும் காவிய நடைக்குப் பெரிதும் இனிதாக வழங்கப் பெறுவது என்பதும் இவர் கருத்தென்பதும், பாரதியாரை ஓரிரு முறையேனும் தம் விழிகளாற் காணும் பெரும் பேறு கிடைத்த புண்ணியர் யாவரும் அனுமானித்தறிதல் இயலும். இது பற்றியன்றே இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும் எனக் கூறிச் சென்றனர் பிங்கல முனிவரும்.

ஏனைய நாடுகள் யாவற்றிலும் தமிழ் நாடு இலக்கியத்திலே, இன்னிசையிலே, காப்பிய வுணர்ச்சியிலே மிகவும் சிறந்திருந்தது. நாயன்மார், ஆழ்வாராதியர் பண்ணிலே தம் பத்திரசக் கீர்த்தனை களை ஆக்கினர். மருத்துவ நூலறிஞர் பாக்களிலே தம் ஆராய்ச்சி களை வெளியிட்டுப் போயினர். வான நூலுடையார் விருத்தங் களிலே பாடினர் தங் கருத்தை. வேதாந்தம் கண்ட சித்தர் தம் அனுபவங்களை இசைப்பாவிலே உலகத்தாருணரப் பகர்ந்தனர். இலக்கணம், அகராதி, கணிதம், சோதிடம், சிற்பம், நாட்டியம் கலைகள்யாவும் தமிழ்ப்பாக்களிலே வழங்கப்பட்டன.

அதிகம் ஏன்? தெருவில் பிக்ஷை யாசித்துச் செல்லும் கிழ வன் கூட

ஐந்து கல்லாலோரு கோட்டை—அந்த வானந்த கோட்டைக்கு ஒன்பதுவாயில்
என்றே, அல்லது

"எச்சி லெச்சி லென்கிறீர்
எதுங்கெட்ட மூடரே!"

என்ற சிவவாக்கியரடிகளேயோ அல்லது அருட்பிரகாச வள்ளலாரது திருப்பதிகங்களில் ஒன்றையோ அல்லது தாயுமானரது "அங்கிங் கெனாதபடி" என்றோ சரளியிழுத்துப்பாடித் தன்பாடே நடக்கிறான்.

இந்த இலக்கியச் சுவை எவ்வளவாக நம் சமூகத்திலே பரவி யிருக்கின்றது என்பதை நம் தமிழ் மக்களது பல்வேறு வாழ்க்கை முறைகளிலேயும் கவனித்து வருவார்க்கு நன்கு விளங்கும். தெருவிலே பொம்மை மிட்டாய்கள் விற்றுச்செல்லும் சிறுவனை கூப்பிட்டு கேளுங்கள்.

"கோழி கோழி கோழிதான்
சொந்த வீட்டு நெல்லைக்கண்டால்
சுற்றி நிற்கிற கோழிதான்
அடுத்த வீட்டு நெல்லைக் கண்டால்
அரைத்து நிற்கும் கோழிதான்!"

என்றுபலவாறாகத் தான் வைத்துள்ள விநோத வஸ்துக்களை விவரிப்பான். தெருவிலே சுண்ணும் பிடிக்கும் சிறுமிகள் தமது தொழிலை நடத்தும்போது பாரும். சரமாரியாகப் பாண்டவர் வனவாசமோ அல்லது வேடப் பிள்ளையார் விளையாட்டுக் குறும்போ அல்லது ராமாயணஏலப்பாட்டோ ஒய்வின்றி வந்துகொண்டேயிருக்கும். கந்துகவரியும் ஏணைப்பாட்டுகளும், ஓடம் வலிப்போர் பாட்டும், மற்றைப் பாட்டுகளும் நாமறிந்தவையே.

ஏற்றப் பாட்டுகளைப் பற்றி எடுக்கும்போது கவிச்சக்கிரவர்த்தியான கம்பரைப்பற்றிய கதை ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது. விடியற்காலையில் கம்பர் கழனிவெளிகள் வழியே செல்லும்போது தண்ணீர் இறைத்து நின்ற இரு ஏற்றக்காரர்கள் தம் கவிமாரியைப் பொழிந்துகொண்டே

அட! மூங்கிலிலைமேலே

தூங்கும் பனி நீரை! என்று ஒரு பாட்டை ஆரம்பித்தார்களாம். இது முடியு முன் ஏற்றச்சால் பழுது படவே ஏற்றக்காரர் தம் பாட்டை நிறுத்தி எவ்விதம் செப்பனிட்டும் அது இறைக்கப்

பயன்படாமையின் விட்டு மறுநாள் வந்து மீட்டும் இறைப்பதாகத் தீர்மானித்துப் போயினராம். இடை குறையாகவிட்ட பாட்டைப் பூரணஞ்செய்து முழுப்பாட்டைச் சித்தரிக்கக் கம்பர் சிறிதும் முடியாது தவித்து இதன் முடிவைக் கண்டறிவோமென்று மீட்டும் பண்டைத் துறவண்டைச் சென்றனராம். பழையபாட்டு வந்ததும் ஏற்றக்காரர்

"அட ! மூங்கிலிலே மேலே
தூங்கும் பனி நீரை
அட ! ஓங்கு கதிரோனே
வாங்கும் இனி நீரே !" என

அதனை முடித்தனராம். கம்பர் வியப்படைந்து அவர்களைப் புகழ்ந்து போயினர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

இத்தகைய கவிச்சுவை நம் தமிழர்க்குள் சமூகம் முழுவதிலும் பரவியிருந்தது. இலக்கியத் தேர்ச்சியும் நாகரீகமுதிர்ச்சியும் பெற்றவரெனக் கூறி நடிக்கும் மேன்மக்கள் மத்தியிலே இது வெகுவாக இப்பொழுது மறைந்து வருகிறது. என்றாலும் தேசிய வுணர்ச்சி இலக்கியவபிருசி முதலிய யாவும் எம் மிறைவி பாரதித் தேவியின் இச்சா சக்தியாற்றோன்றுவனவன்றோ? இத்தகைய கவிச்சுவையும், கல்வி நலனும் மீட்டுஞ் சுரக்க அவள் பதம் வழுத்தி இது நிறுத்துகின்றேன்.

## அனுபந்தம் 4.

### சில அபிப்பிராயங்கள்

" சுயராஜ்யா (1925-அக்டோபர்)

### தமிழ்க்கலை வளர்ச்சி

---

தமிழ் மொழி தவிக்கின்றது. ஆதரிப்பார் இல்லை. முன்னாளி லே முடிவேந்தர் தமிழணங்கை வணங்கிவந்தனர். வள்ளல்கள் வேண்டி நின்றனர்; பாவாணர் அலங்கரித்துப் போற்றினர். முன் சொன்ன இருவகையாளரும் இந்நாளில் இல்லை. அத்திப்பூவைப் போல் இருப்பினும் ஆதரிப்புத் தருகின்றாரில்லை. சமயப்பண்டித ராயுள்ளோர் கலங்குகின்றனர். இங்கிலையில் தடியெடுத்தவன் எல் லாம் தண்டக்காரன் என்பதுபோல் இரண்டேடு எழுதிவிட்டோர் எடுப்பாக அரங்கேறுகின்றனர். ஏன் என்று கேட்பாரும் இனிய வழி திருப்புவாரும் இலராயின், நிலைமை கேவலமாதல் இயற்கை. மதுரையில் இருக்கும் தமிழ்ச்சங்கங்கள் முதல் பற்பல சங்கங்கள் இருப்பது மெய்யே. தமிழ்க்கலையின் வளர்ச்சிக்காக அச்சங்கங்கள் செய்துள்ள ஊழியம் எத்துணை? சிறுவிரல் கொண்டு இலகுவில் எண்ணிவிடக்கூடும். அயலகமான வங்கமும் ஆந்திரமும் தத்தம் தாய் மொழியைப் பரப்பிப் பரவசம் பெறுகின்றன. காலத்தின் தேவைக்கு ஏற்ற முதனூற்கள் எழுதியும், வழி நூல்கள் இயற்றியும் சார்பு நூல்கள் செய்தும் சாலச்சிறப்பெய்துகின்றன. ஒரு சமயம் தாயகத்தையும் கடந்து, கடலுக்கு அப்பாலுள்ள பலப்பல தீவுகளி லும் தேயங்களிலும் சுடரொளிபரப்பி அறிவைப்பெருக்கிய தமிழ்த் தாய் சொந்த நாட்டிலே தியங்குகின்றாள். இதுகண்டு இனி வாளா விருத்தல் இழிவெனக்கொண்டு, நந்தமிழறிஞராம் சிதம்பரம் ஸ்ரீமான் வாசுதேவ சர்மா தாய்த்தொண்டாற்றப் பேரவாப் பூண்டு நிற்கின்றார். அத்தொண்டின் நோக்கும் போக்கும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளார் ஒரு கட்டுரையிலே அது இன்றைய பக்கத்தில் பிரசுரமாயுள்ளது. தமிழறிஞர் களும் மற்றவர்களும் அக்கட்டுரையைக் கூர்ந்து நோக்கி அத்

தொண்டர் பெருமானுர்க்குத் துணை புரிய முற்படுவா ரென எண்ணுகின்றேம்.

(தமிழ்க் கடிதங்கள்)

1

ஸ்ரீமதி மா. மங்களம்மாள் அவர்கள்,
"தமிழ்மகள்" ஆசிரியை
சென்னை, 17-3-1926.

அழகிய தமிழ் மொழியை அலங்கார மடையச் செய்வான் வேண்டி, தங்களால் மேற்கொண் டொழுகப் பெறும் அரும் பணிகள் யாவும் சித்திபெறுதல் வேண்டுமாய்த் திருவருளை வேண்டுகிறேன். தங்களால் மேற்கொண் டொழுகப் பெறுவதான அவ்வரும் பணியில் உண்மைத் தமிழ் மக்கள் யாவரும் கலந்து பங்கு பெற்றுக் கொள்வார்களாக. அத் தொண்டானது இத்தமிழ் நாட்டினதும் மொழியினதும் பண்டைப் புகழையும் பெருமையையும் மறுபடி நிலை நாட்டிப் புத்துயிர் அளிக்க வல்ல உயிர் நாடி போன்றதாகும். இப் பெருங் கைங்கர்யத்தைத் தொடங்கியவரான தங்கள்பால் இறைவன் சலியாத ஊக்கத்தையும் உழைப்பையும் தந்து உதவுவாராக.

(2)

ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி அவர்கள்,
பட்டு வர்த்தகம், காசி. 21-10-25

"ஒரு தமிழ் வித்தியாப் பிரசாராலயம்" தேவையெனத் தலைப்பெயரிட்டுத் தாங்கள் "சுதேசமித்திர"னில் எழுதிய வியாசத்தைப் படித்து மகிழ்ந்தேன்.

தங்களுடைய தமிழபிமானத்திற்கும், பேராவலுக்கும் தமிழ்த்தாய் தங்களை ஆசீர்வதிப்பாளாக.

சுவர்க்கவாசி. வ. வெ. சுப்பிரமணியம் தனதுள்ளத்துக்கொண்டிருந்த பேரெண்ணங்களில் தாங்கள் வெளியிட்டுள்ளனவும் ஒன்றேயாகும். தமிழர்களின் துரதிர்ஷ்டத்தால் அன்னாரைச் சிறுவயதிலேயே நாமிழந்துவிட்டோம். ஆயினும் அப்பெரியாரின் ஆத்ம

சக்தி நம்முடன் இருப்பதால் தங்களைப்போன்ற விவேகிகளின் உத்தேசங்கள் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. தங்கள் முயற்சியும் உத்தேசங்களும், தமிழர்கள் விவேகிகளாயின் நன்கு கைகூடுவதில் தடையில்லை இதுவே எனது நம்பிக்கை.

தாங்கள் கூறியதுபோல் ஒற்றுமை, பரஸ்பரானுராகம், ஸ்திர லக்ஷ்யம் ஆகிய இவையிருக்குமாயின் தாங்கள் உத்தேசித்ததினும், பெரிய காரியங்களும் சாதிக்கலாம்.

தங்கள் வியாசத்தைப்பார்த்து எனது ஜீவனில் புதிய இரத்தச் சூடுண்டாகியிருக்கிறது. என்னுலான உதவியைத் தங்களுக்குச் செய்யத் தயாராக விருக்கிறேன்.

(3)

ஸ்ரீமான் பக்த்தாங்க்ரிரேணு கண்ணன் அவர்கள் ஒக்டுவின், பர்மா, குரோதன, தை, 10–வ. அன்பீர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி "லோகோபகாரி" வாயிலாக விவரித்துள்ள விஷயமானது மிகவும் முக்கியமானதே. நம் தாய் நாட்டில் இத்தகையதொரு கழகம் இல்லாத பெருங்குறையை நிவர்த்திக்க முன் வந்த தங்கள் கோரிக்கை தமிழணங்கின் திருவருளால் இனிது நிறைவேறுக. இக்கழகமானது ஜாதி வித்தியாசமின்றி என்றும் நிலவுக. நம் தாய் பாஷை குன்றிய இக்காலத்தில் தளர விடாது அபி விர்த்தி அடையுமாறு இக்கைங்கரியத்தி லீடுபட்ட தங்கட்கு சர்வ மங்களத்தையும் ஸ்ரீ கோபிகாவல்லபன் கொடுத்தருள்வானுக. மங்களமாக தமிழ்க்கலை வளர்க.

ஆங்கிலத்தில் வரையப் பட்டுள்ள அபிப்பிராயங்கள்

I

**The Rt. Hon'ble V. S. Srinivasa Sastriar, Royappettah, Madras, 10-2-26** I have your letter of the 8th and am interested to know of your great plan of a central Tamil Academy. I am of course profoundly interested in what you say and should be pleased to be of use.

II

**The late M.R.Ry. T. V. Seshagiri Iyer Avl., Govardhan, Kilpauk** 19–10–25. I agree with the necessity for an academy and with the programme of work you suggest — — I want to see the country and the cause prosper — — — I place my services at your disposal.

III

**Sir. C. P. Ramaswamy Iyer, The Grove, Cathedral P. O Madras** 2 Feb. 1926. Many thanks for your letter. I am entirely in sympathy with the objects that underlie your scheme. But of course, it has to be very carefully worked out and pecuniary support has to be enlisted.

IV

**The Hon'ble S. Srinivasa Iyengar Avl., M L.A. Luz, Mylapore** 2–2–1926. I have no doubt however that a passionate devotion to Tamil will help patriotism, unity, courage, and the right type of culture.

V

**M. R. Ry. K. V. Krishnaswamy Iyer avl. Advocate Mylapore** 11–2–26. We have been already considering a scheme on the lines your suggest. We intend to start an Oriental Institute attached to and as a department of the university which will perform the funetion you have inview.

VI

**R. V. Subramaniam, Journalist, Tiruppattur** 23–9–25 I was immensely pleased to see your appeal for the formation of a Tamil Academy— —in the pages of "NEW INDIA" of the 22nd— — —I am trying to work and advertise on

the lines suggested by you in your timely and wellworded appeal. May god bless you.

## VII

**M.R.Ry. S. S. Bharathi Avl. Vakil, Madura.** 13-10-1925

I wish your laudable mission in the cause of Tamil Literature, all sucess it should command— — —I will watch your activities with great interest and will wholeheartedly wish you all joy and sucess of your work.

Jananukoola
Press,
Trichinopoly.
1928